1987 நவம்பர் 18]

களா? அமருங்கள். நல்லது செய்தால்கூட பிரச்சினைதான். அமைச்சர் அவர்களை பதில் சொல்ல வைத்து உங்களைத் திருப்திபடுத்திய பிறகுங்கூட பிரச்சினையை எழுப்புகிறீர்கள்.

டாக்டர் தே. குமாரதாஸ்: உங்களை நான் மனதார பாராட்டுகிறேன். இதோடு இன்னொன்று . . . .

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காணாமல் போன மீனவர்களைப் பற்றிக் கேட்கிறார்கள். அப்படி அவர் கேட்பதற்குக் காரணம் என்ன என்று எனக்குப் புரிகிறது. கூட்டுறவுத் துறையில் பதிவு செய்து இருக்கின்ற மீனவர்களுக்கு, காணாமல் போனால், மத்திய அரசிலிருந்து நிதி உதவி வாங்கி அதை அவர்களுக்குக் கொடுக்கிறோம். பதிவு செய்யாத மீனவர்களுக்கு நிதி உதவி அளிப்பதில்லை என்று இருக்கின்றதை மாற்றி முதலமைச்சர் நிதியிலிருந்து கொடுப்பதாக முதலமைச்சர் அவர்கள் அதற்கும் சேர்த்து ஆணையிட்டிருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக ஊர்வலம் வந்த மாணவர்கள் மீதான வழக்கு குறித்து.

திரு. பொன் முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 12 ஆம் தேதியன்று இலங்கையிலே இன்னல்களுக்குள்ளான தமிழர்களுக்காக தங்களது கல்லூரிகளுக்கு முன்னாலே கறுப்புக்கொடி ஏற்றி வைத்து ஊர்வலமாக வந்த மாணவர்களை புழல் காவல் சாவடிக்குப் பக்கத்திலே கடுமையாகத் தாக்கி அவர்களில் 10 பேர்கள் மீது இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள். எனவே அப்படி வழக்குத் தொடர்ந்த காவல் துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதோடு இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக ஊர்வலம் நடத்திய மாணவர்கள் மீது போடப்பட்ட வழக்கை வாபஸ் பெற இந்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-40)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றிய முழு விவரங்கள் அரசிடத்தில் இல்லை. இன்றையதினம் எத்தனையோ ஊர்வலங்கள் நடைபெறுகின்றன. எதற்காக நடைபெறுகின்றன என்பது கூட அல்ல. இலங்கைத் தமிழர்களுக்கு வாழ்வு அளிக்க வேண்டுமென்ற உணர்வை வெளிப்படுத்தி பல்வேறு அரசியல் கட்சிகளும்,

மற்றவர்களும் தங்களுடைய உணர்வை ஒவ்வொரு ஊரிலும் வெளிப்படுத்தி வருகிறார்கள். எங்கே பார்த்தாலும் அமைதியாக வும், சிறப்பாகவும் அவை நடைபெறுகின்றன. இப்படி சங்கிலித் தொடர் மற்றும் கூட்டங்கள் எல்லாம்கூட ஒழுங்காக வும், சிறப்பாகவும் நடைபெற்று வருகின்றன. ஆகவே, ஊர்வலத் தில் தடியடி நடத்தித்தான் தீர வேண்டும் என்பது போலீசா ருடைய கொள்கை அல்ல. எவ்வளவோ ஊர்வலங்கள் எல்லா ஊர் களிலும் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. மதுரையிலே என்ன ஏற்பட்டது, அதற்கு என்ன காரணம் என்பது தெரிய வேண்டும்.

அந்தக் காரணம் இப்போல நம்மிடத்தில் இல்லை. தடியடி நடத்த வேண்டிய அளவில் என்று சொன்னால், வன்முறை அல்லது வேறு செயல்கள் நடைபெற்றால்தான் போலீஸ் தலை யிட்டிருக்கும். என்ன நடைபெற்றது என்று கிட்டவட்டமாக இப்போது சொல்ல முடியாது. விசாரித்துத்தான் சொல்ல வேண்டும். வழக்கு தொடரும் அளவுக்கு என்ன நடைபெற்றது என்பதையும், வழக்கிலே தங்களுடைய நிலைமையை வாதாடி எடுத்துச்சொல்லி நீதி பெறவும் வாய்ப்பு இருக்கிறது. இருந் தாலும் முழுமையாக ஆய்ந்து பார்த்து, மாண்புமிகு உறுப்பினர் பிரச்சினையை எழுப்பியிருப்பதன் காரணமாக முழு விஷயங் களையும் ஆராய்ந்துப் பார்த்து, அதன்மீது எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை ஆராய்ந்துப் பார்த்து, தக்க நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதையும், அதனுடைய நிலைமைகளைப் பார்த்து எடுக்கக் கூடியவைகளை அரசு எடுக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கை அவையில் வைக்கப்பெறாதது குறித்து.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்ப விரும்பு கிறேன். இங்கே அரசு உறுதிமொழிக் குழுவின் ஐந்தாவது அறிக்கை வைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள், ஆனால் அது வைக்கப்படவில்லையே, அது பற்றி விளக்கம் பெற விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதிமொழிக் குழு வின் தலைவர் அறிக்கையை அவையில் அளிக்கும்போது உறுப் பினர்களுக்குக் கொடுக்கப்படும்.